**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.**

**அசல் வழக்கு எண்.50/2017**

முன்னிலை - பா.சரவணன், பி.எஸ்ஸி.பி.எல்.,

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி.

2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 02 ஆம் நாள் வியாழக்கிழமை வாதி தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.கார்த்திக் ராஜா, உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அமர்நாத் | தந்தை பெயர் | : | துரை மாணிக்கம் |
| ஜாதி | : | | கிராமம் | : | |
| வட்டம் | : | | மதம் | : | |
| தொழில் | : | | வயது | : | |

நாள் : 02.01.2025

**P.W. : 1**

**வாதி தரப்பில் முதல் விசாரணை**

நான் வாதி ஆவேன். எனது முதல் விசாரணைக்காக பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். 22.03.2013 ஆம் தேதி சாமிமுத்து என்பவர் பெயரிலான அசல் கிரைய பத்திரம் **வாசாஆ.1** ஆகும். மேற்படி சாமிமுத்து பெயரில் குறைவு முத்திரை கட்டணம் வசூலித்ததற்கு வழங்கப்பட்ட பற்றுசீட்டு **வாசாஆ.2**

ஆகும். 20.04,2014 தேதியில் சாமிமுத்துவின் பவர் ஏஜெண்ட் சுகுமார் என்பவர் எழுதிக் கொடுத்த பதிவு செய்யப்படாத கிரைய உடன்படிக்கை அசல் **வாசாஆ.3** ஆகும். 26,04,2013 தேதியில் சுகுமார் பெயரில் சாமிமுத்து எழுதிக் கொடுத்த பதிவு செய்த பொது அதிகார ஆவணம் **வாசாஆ.4** ஆகும். தேதியிடாத சுகுமார் பெயருக்கு எழுதி தரப்பட்ட ரசீது அசல் **வாசாஆ.5** ஆகும். 26.07.2013 தேதியில் சுகுமார் பெயரில் சாமிமுத்து எழுதிக் கொடுத்த பதிவு செய்யப்படாத கிரைய உடன்படிக்கை பத்திரம் அசல் **வாசாஆ.6** ஆகும். தாவாப்படி தீர்ப்பாக வேண்டும்.

(குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.